**11.11.2025 அசல் வழக்கு எண். 63/2018 Starting Time : 11.36 a.m.**

**வா.சா.1 திரு. செல்லப்பா த/பெ. பார்கவநாதன்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**1**). எனது தகப்பனார் எந்த ஆண்டு காலமானார் என்றால் 2013ல் காலமானார். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே லோகபால நயினார் தாவா சொத்துக்களை 2ம் பிரதிவாதி ரவிச்சந்திரனுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விற்பனை ஆவணத்தை பற்றி விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2018ல் தெரிய வந்தது. அந்த ஆவணத்தில் எந்த வருடம் கிரயம் செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2006 அல்லது 2007 ஆகும். 2006-2007ல் விற்பனை நடந்துள்ளபோது ஏன் என் தகப்பனார் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எங்களுக்கு தெரியவில்லை.

**2**). எனது தகப்பனார் இறந்தபிறகு தாவா சொத்துக்களை பாகம் ஏதும் செய்துக் கொண்டோமா என்றால் பாகம் செய்துக் கொள்ளவில்லை, அனுபவித்து வருகிறோம். 2013க்கு முன்பே நாங்கள் அனுபவித்து வருவதாக கூறியுள்ள பட்சத்தில், அப்போது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் விற்பனை பற்றிய விவரம் எங்களுக்கு தெரியாது. எப்போது தெரிய வந்தது என்றால் 2018ல் தான் தெரிய வந்தது. பிறகு எவ்வாறு தெரியவந்தது என்றால் தாவா சொத்துக்களில் எல்லையில் உள்ள மரங்களை வெட்டிவிட்டார்கள் என்று ஊரில் உள்ளவர்கள் சொன்னதன்பேரில் தெரியவந்தது, அதை நாங்கள் சென்று கேட்டபோது இந்த இடத்தை நாங்கள் வாங்கிவிட்டோம் என்று கூறினார்கள், அதன் அடிப்படையில் தெரியவந்தது.

**3**). மேற்படி **வா.த.சா.ஆ.3** கிரயம் செய்துக்கொடுத்த லோகபால நயினார் அவரது சொத்துக்களையும் சேர்த்து கிரயம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2013லேயே தாவா சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருவதாக கூறியுள்ளபட்சத்தில், மேற்படி கிரயத்தை பொறுத்து 2013லேயே வழக்கு தாக்கல் செய்யாமல் காலதாமதத்தை விளக்குவதற்காக வில்லங்கம் எடுத்து தாவாவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா

காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. வழக்கில் எனது சகோதரர் குமார், சகோதரிகள் வசந்தலட்சுமி, அமுதலட்சுமி ஆகியோர்களை வழக்கில் அவசிய தரப்பினர்களாக சேர்க்காத தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவர்கள் என்னை வழக்கை நடத்திக்கொள்ளுமாறு கூறிவிட்டதால் நானே நடத்தி வருகிறேன்.

**4**). மேற்படி நபர்கள் எனக்கு வழக்கை நடத்த அதிகாரம் கொடுத்துள்ளதாக கூறியுள்ளபட்சத்தில், அதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கை நடத்துவது மேற்படி என் சகோதர, சகோதரிகளுக்கு தெரியாது என்றால் தெரியும். மேற்படி கிரயம் செய்துக் கொடுத்த லோகபால நயினாருக்கு 3,4 பிரதிவாதிகளான ரோசம்மாள், சுபாஷ் என்பவர்களை தவிர ராஜகுமாரி க/பெ. ஜீவேந்திர நயினார் என்ற மகள் இருக்கிறார் என்றால் எனக்கு மேற்படி இரண்டு நபர்கள் மட்டுமே தெரியும், அவருடைய மகளை பற்றி தெரியாது. மேற்படி ராஜகுமாரி என்பவரை வழக்கில் சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதுபற்றி எனக்கு தெரியாது.

**5**). லோகபாலநயினார் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் மொத்தமும் செல்லாது என்று நான் கேட்க முடியாது என்றால் என்னுடைய சர்வே எண்.103/6டி சொத்தை பொறுத்து மட்டுமே செல்லாது என்று கேட்டுள்ளேன். வழக்கு கால தாமததோஷத்தாலும், உரிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காத தோஷத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> - இல்லை.**

**Ending time : 11.54 a.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.